பக்கங்கள் 14+2

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 04 வியாழக்கிழமை 19.12.2024 | அதிர்வு 140

## பசறைப் பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

(ராமு தனராஜ்)

பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பசறை – பதுளை வீதியில் கோயில் கடைக்கு அருகாமையில் 45 – 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# மதுபானசாலை அனுமதிக்குப் சிபாரிசு செய்தவர்களின் பெயர்களை அநுர அரசு உடனடியாக வெளியிட வேண்டும்

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் மீண்டும் வலியுறுத்து




(எஸ்.ரகுதீஸ்)

கடந்த அரசால் வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களைச் சிபாரிசு செய்தவர்களின் பெயர்ப் பட்டியலைத் தற்போதைய அரசு உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தினார்.

யாழ். வடமராட்சி, உடுப்பிட்டி – இமையாணன்மேற்குப்பகுதியில்அமையப்பெற்ற மதுபானசாலை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. 02

# மாவையின் தலைமையை தக்க வைக்கும் வழக்கு தள்ளி வைக்கப்பட்டது!



இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜாவே நீடிக்கின்றார் என்று பிரகடனம் ஒன்றை உத்தரவாக வழங்கக் கோரி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் தாக்கல் செய்த வழக்கு எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இன்று யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதிபதி எஸ்.கணதீபன் முன்னிலையில் இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மேற்படி ஜனவரி 7ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. 02

# முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் இன்று மியன்மார் அகதிகளுடன் கரையொதுங்கிய படகு








(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் மியன்மார் நாட்டுப் படகு ஒன்று இன்று கரையொதுங்கியுள்ளது.

அந்தப் படகில் 102 மியன்மார் நாட்டுப் பிரஜைகள் உள்ளனர் எனவும், இதில் 35 பேரளவில் சிறுவர்கள் எனவும், கர்ப்பிணித்தாய்மார்கள், 02

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**முள்ளிவாய்க்கால்...**

முதியவர்களும் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், குறித்த இடத்துக்கு விரைந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், படகில் இருக்கும் அகதிகளை அந்தப் பகுதி மீனவர் சங்கத்தினருடன் இணைந்து படகில் சென்று பார்வையிட்டிருந்தார். இதன்போது உலர் உணவுப்பொருட்களும் வழங்கப்பட்டன.

மேலும், முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர், கடற்படையினர் ஆகியோரும் கரையொதுங்கிய அகதிகளின் நிலைமைகள் தொடர்பில் பார்வையிட்டனர்.

இவர்களைத் திருகோணமலையில் இருந்து கடற்படை படகு ஒன்று வருகை தந்து அங்கு மீட்டுச் செல்லவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.













**மாவையின்...**

இந்த வழக்கில் எதிராளிகளாக மாவை சேனாதிராஜா, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் எம்.பி., கட்சியின் நிர்வாகச் செயலாளர் எக்ஸ்.குலநாயகம் மற்றும் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா நீடிக்க முடியுமா என்பது தொடர்பான விடயம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட இருக்கையில் இந்த வழக்கு நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டு இன்று நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மத்திய குழு கூட்டத்தில் மாவை சேனாதிராஜாவின் தலைமைப் பதவிக்கு பங்கம் ஏற்படுத்தும் முடிவு எதுவும் எடுக்கப்படாமல் இருப்பதற்கான இடைக்காலத் தடை உத்தரவு வழங்கவும் இந்த வழக்கில் கோரப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

யாழ். மாவட்ட நீதிபதி சதீஸ்வரன் கொழும்பில் சட்டத்துறை சார்பாக உத்தியோகபூர்வ விடயங்களில் பங்குபற்றச் சென்றிருப்பதால் இன்றும் நாளையும் பதில் நீதிபதி முன்னிலையில் வழக்குகள் எடுக்கப்பட்டு திகதி இடப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இந்த வழக்கும் இன்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது வரும் திங்கட்கிழமை முதல் நீதிமன்றங்களுக்கு வருடாந்த இறுதி விடுமுறை இருப்பதால் புதுவருடத்தில் முதலாவது நீதிமன்ற வேலை நாளான ஜனவரி 7ஆம் திகதிக்கு பதில் நீதிவான் வழக்கை ஒத்தி வைத்தார்.

**மதுபானசாலை...**

குறித்த மதுபானசாலை அகற்றப்பட்ட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த மனுவை 32 பொது அமைப்புக்கள் சேர்ந்து தாக்கல் செய்திருந்தன. இந்நிலையில், இந்த மதுபானசாலை ஏன் மூடப்படக்கூடாது என்பதற்கான காரணம் காட்டும் விசாரணை இன்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது, மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன்,

கடந்த அரசால் வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களைச் சிபாரிசு செய்தவர்களின் பெயர்ப் பட்டியலை தற்போதைய அரசு வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அத்துடன் கற்காதவர்கள் நிதி கொடுத்துப் பெற்ற பட்டமே கலாநிதிப் பட்டம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்தியப் பயணத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உங்களது அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று கூறியமை வரவேற்கத்தக்கது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**பசறைப் பகுதியில்...**

பசறை - பதுளை வீதியில் கோயில் கடைக்கும் பசறை பால் சபைக்கும் இடையே வீதியோரமாக மேற்படி சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது.

அவ்விடத்தில் பாதணிகளும், பை ஒன்றும் அதற்கு அருகாமையில் பை ஒன்றில் 4 யோகட் கோப்பைகளும் காணப்படுகின்றன.

மேற்படி நபர் இறந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யானை - மனித மோதலைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுங்கள்!

## நாடாளுமன்றில் சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை

(கி.வசந்தன்)

வன்னிப் பகுதியில் குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலங்களில் அதிகரித்து இடம்பெறும் யானை – மனித மோதல் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

“பொருளாதாரத்தில் வவுனியா மாவட்டம் ஏனைய மாவட்டங்களைப் போலவே, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. இங்கு வாழும் விவசாயிகள் யானைகளின் தொல்லைகளால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றார்கள்.



கடந்த மாதம் எமது மாவட்டத்தில் மாத்திரம் 11 பேர் யானைத் தாக்குதலுக்கு உள்ளாகி இறந்திருக்கின்றார்கள். ஆகவே, எமது பகுதிகளுக்கு யானை வேலி அமைப்பதற்கான நிதியை அரசு கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

கீழ் மல்வத்து ஓயா திட்டம் வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. அந்தத் திட்ட முன்மொழிவில் யானை – மனித மோதலைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கீழ் மல்வத்து ஓயா திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால் திட்டப் பிரதேசத்தில் இருந்து யானைகள் ஏனைய பிரதேசங்களுக்கு இடம்பெயர வேண்டிய சூழல் ஏற்படும் என்பதால் தற்போதுள்ள யானை – மனித மோதல் நிலைமையானது மிக மோசமடையும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இதுவரையில் இந்த விடயம் தொடர்பில் அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.” – என்றார்.

# இலங்கை – இந்திய மீனவர்களின் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறை என்றால் என்ன?

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் கேள்வி

(எஸ்.நிதர்ஷன்)

“இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி – இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடனான சந்திப்பின் போது கடற்றொழிலாளர்கள் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அதனடிப்படையில் குறித்த மனிதாபிமான அணுகுமுறை என்றால் என்ன என்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் வினவவுள்ளேன்.”

– இவ்வாறு முன்னாள் கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய குறித்த விடயம் தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

“ஜனாதிபதியின் அண்மைய இந்திய விஜயத்தின்போது இலங்கை – இந்தியா இடையே கடற்றொழிலாளர்கள் விடயம் தவிர இணக்கம் காணப்பட்ட அல்லது கைச்சாத்திடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான அரசால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை வலுவூட்டியதாகவே அமைந்துள்ளது. அதனடிப்படையில் குறித்த செயற்பாட்டை நான் வரவேற்கின்றேன்.



இதேவேளை, கடற்றொழிலாளர் பிரச்சினைகளில் எதுவிதமான தீர்வுகளையும் குறித்த விஜயத்தின்போது எட்டப்பட்டதாகத் தெரியவில்லை. இதே நேரம் மனிதாபிமான அடிப்படையில் குறித்த விடயத்தை அணுக வேண்டும் என்ற நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.


அவ்வாறாயின் மனிதாபிமான நிலைப்பாடு என்பது என்ன என்பதே இன்றுள்ள கேள்வியாக இருக்கின்றது.

அதாவது இலங்கையின் கடற்பரப்புக்குள் இந்திய மீன்பிடியாளர்கள் வந்து மீன்களைப் பிடித்துச் செல்வதற்கும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்யாதிருக்க வேண்டும் என்பதே இந்த மனிதாபிமான நிலைப்பாடாக இருக்க வேண்டும்.

ஆனால் எனது நிலைப்பாடு அன்றும் சரி இன்றும் சரி எமது கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக இந்திய மீன்பிடியாளர்கள் உள்நுழைந்து மீன்களைப் பிடிக்கவோ, எமது வளங்களை அபகரிக்கவோ ஒரு வினாடி கூட இடமளிக்கக்கூடாதென்பதாகவே இருக்கின்றது. இதை நான் பொது வெளியிலும் பல தடவைகள் கூறியிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாது கடந்தகாலம் நான் ஆட்சியில் இருந்தபோது இலங்கை – இந்திய வெளிவிவகார உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட கலந்துரையாடலின்போது சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அப்போதும் இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு எந்தவகையிலும் இந்தியச் சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகளுக்கு இடம் கொடுக்க முடியாது என நான் கூறியிருந்தேன் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் தற்போது சிலர் ஊடகங்களில் கூறுவது போன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது கடல் வளத்தையோ, கடற்பரப்பையோ இந்திய மீன்பிடியாளர்களுக்கு இடம் கொடுப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுப்பதற்கு இடமளிக்கவில்லை.” – என்றார்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# வளக் குறைகளுடன் இயங்குகின்றன வன்னியில் செயற்படும் பாடசாலைகள்

## சுட்டிக்காட்டினார் ரவிகரன் எம்.பி.

(பா.சதீசன்)



வன்னி பாடசாலைகளில் உள்ள வளக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாடசாலைகளுக்கான வளங்களைப் பகிரும்போது அனைத்துப் பாடசாலைகளுக்கும் வளங்களை சமமாகப் பகிருமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை அண்மையில் தேசிய ரீதியில் சாதித்த வன்னியைச் சார்ந்த மாணவர்களுக்கும் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையிற்றும் போதே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பாடசாலைகளுக்கு வளங்கள் சமத்துவ அடிப்படையில் பகிரப்படவேண்டும். இன்னும் வன்னி மாவட்டத்தின் பலபாடசாலைகளில் இலத்திரனியல் வளப்பட்ட வளநிரப்பல் போதுமான அளவில் இல்லை.

வன்னியில் முல்லை வலயம் மற்றும், மன்னார் வலயங்களில் கணினி வள நிலையம் இல்லை. பாடசாலைகளில் சுகாதாரப் பணியிளர்கள் போதுமான அளவில் இல்லை.

அந்தவகையில் கல்விசாரா ஊழியர்கள், பாடசாலைப் பணியாளர், இரவு நேரக் காவலாளி போன்றோரின் தேவைகளும் உள்ளன.

குறிப்பாக வன்னியில் போதுமான நிதியிடல் இல்லை. இன்றளவும் முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் ஒரு கணினியுடன் இயங்கும் பாடசாலைகள்தான் உள்ளன.

இதேவேளை, மாணவர்களிடையே விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் வகையிலான முழுமையான வளங்கள் வழங்கப்படவேண்டும்.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் தோட்டவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி அன்ரன் ஜேசுதாசன் யதுர்சிகா பாடசாலை மட்டத் தேசிய மெய்வல்லுனர் போட்டியில் மகளிருக்கான ஈட்டி எறிதலில் தங்கம் வென்றுள்ளார்.

அதேவேளை, முல்லைத்தீவு, கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலய மாணவி சுபாஸ்கரன் பவித்திரா தேசிய ரீதியிலான மல்யுத்தப் போட்டியில் தங்கம் வென்றுள்ளார். அதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பத்து மாணவர்கள் தேசிய ரீதியிலான மல்யுத்தப் போட்டியில் பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.

அத்தோடு முல்லைத்தீவு வள்ளிபுனம் மகாவித்தியாலய மாணவன் ரதீஸ் சந்தோஷ், தேசிய ரீதியிலான குண்டு தள்ளுதல் போட்டியில் ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர்களைப் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இவ்வாறு வன்னியைச் சேர்ந்த மாணவர்கள் தேசிய ரீதியில் போட்டியிட்டு தங்கங்களையும், ஏனைய பதக்கங்களையும் பெறுகின்றபோதும்அந்த மாணவர்களுக்கும் பாரிய தேவைப் பாடுகள் இருக்கின்றன.

குறிப்பாக பயிற்றுவிப்பாளர்கள் போதமை, பயிற்சி செய்வதற்கான முறையான மைதானங்கள் இன்மை, பயிற்றுவிப்புக்கான உபகரணங்கள் இன்மை என பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே இது தொடர்பான விளையாட் டுத்துறை அமைச்சு இந்த விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்எனக்கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.

# பேராசிரியர் கலாநிதி க.ஸ்ரீ கணேசனுக்கு சனிக்கிழமை இணுவிலில் பாராட்டு நிகழ்வு

இணுவில் கலை இலக்கிய வட்டம், இணுவில் அறிவாலயம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பேராசிரியர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசனுக்குப் பாராட்டு நிகழ்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.

நாளை மறுதினம் (21) சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இணுவில் கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள அறிவாலயத்தில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பேராதனைப் பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் காருண்யா புஸ்கரனின் தமிழ் வணக்கம், கஜப்பிரியா சிவபாலசுப்பிரமணியத்தின் வரவேற்பு நடனம், இணுவில் கலை இலக்கிய வட்ட உப தலைவர் கவிஞர் நாக சிவசிதம்பரத்தின் வரவேற்புரை என்பன இடம்பெறும்.

தொடர்ந்து வாழ்த்துரைகளைச் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வு நிலை அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன், வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா, யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவமும் வர்த்தகமும் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா, கூட்டுறவாளர் பெ. கனகசபாபதி, வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் தமிழ்மணி கலாநிதி அகளங்கன், பொறியியலாளர் சாகித்தியரத்னா ஐ. சாந்தன், யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத் தலைவர் சிவஸ்ரீ கலாநிதி பாலகைலாசநாதக் குருக்கள், யாழ். பல்கலைக் கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறைத் தலைவர் கலாநிதி க. சண்முகநாதன், திருமறைக் கலாமன்றப் பிரதி இயக்குநர் ஜோன்சன் ராஜ்குமார், இணுவில் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப் புலவர் ச. முகுந்தன், பூநகரி வேரவில் இந்து மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்து சைவப்புலவர் க.சுமுகலிங்கம், இணுவில் இளந்தொண்டர் சபையைச் சேர்ந்த நடனக் கலைஞர் நா. கிருபாகரன் ஆகியோர் வழங்குவர்.

இதனையடுத்து ஏற்புரை இடம் பெறும். இறுதியில் இணுவில் கலை இலக்கிய வட்டச் செயலாளர் ந. ஞான சூரியர் நன்றியுரையை நிகழ்த்துவார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஊடகம் மீது அபவாதம்

இராஜதந்திர சர்ச்சைகளை உருவாக்குவதற்கும் நாசவேலைகளில் ஈடுபடுவதற்கும் எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய சில தினங்களுக்கு முன்னர் தமது நாடாளுமன்ற உரையில் குற்றம் சுமத்தியிருந்தார்.

கல்வித் துறையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் விளக்கிய சமயமே பிரதமர், இப்படி அதிருப்தி வெளியிட்டார்.

சீன அரசாங்கத்தின் ஆதரவுடன் 2025 ஆம் ஆண்டிற்கான முழுமையான பாடசாலைச் சீருடைத் தேவைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று குறிப்பிட்ட அவர், "எதிர்க்கட்சிகளும் அவர்களுடன் இணைந்துள்ள சில ஊடக நிறுவனங்களும் நமது அரசாங்கத்தின் சர்வதேச உறவுகள் பலவீனமானவை என்ற தோற்றத்தை உருவாக்க முயற்சிக்கின்றன. இருப்பினும், அத்தகைய முயற்சிகள் அனைத்தும் தொடர்ந்து தோற்கடிக்கப்பட்டன" எனவும் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டின் ஆழம் கருதி என்ன, ஏது என்று விசாரித்துப் பார்த்த போது, தனது இராஜதந்திரத் தவறை அம்பலப்படுத்திச் சுட்டிக் காட்டிய ஊடகத் தரப்பு மீது பிரதமர் அபவாதக் குற்றச்சாட்டுச் சுத்தியிருக்கின்றார் என்ற உண்மை அம்பலமாகியிருக்கின்றது.

இலங்கை மாணவர்களுக்கு என சீன அரசாங்கம் நன்கொடையாக வழங்கும் பாடசாலைச் சீருடைத் துணியின் ஒரு பகுதியை சம்பிரதாயபூர்வமாகப் பொறுப்பேற்கும் நிகழ்வு கொழும்பு துறைமுகத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பங்குபற்ற வரவேண்டிய பிரதமர் ஹரிணி அமரசூரிய சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேல் தாமதமாக வந்து சீன தூதுவரையும் ஏனையோரையும் துறைமுகத்தில் நீண்ட நேரம் பார்த்து இருக்க - காவல் இருக்க - வைத்திருக்கிறார்.

அது மாத்திரமில்லாமல் அந்தச் சீருடைத் துணிகளை பொறுப்பேற்று நன்றி தெரிவிக்கும் போது சீனாவை தவறுதலாக அதன் அரசியல் பரம வைரியான தைவானின் பெயரால் குறிப்பிட்டு நிகழ்வை சொதப்பினார் பிரதமர்.

தைவானுக்கும் சீனாவுக்கும் இடையில் உச்ச முரண்பாடு இருப்பது உலகறிந்த விடயம். சீனாவின் பக்கத்தில் தனித் தீவாக இருக்கும் தைவான் தன்னை உத்தியோகபூர்வ சீனவாக முன்னிலைப்படுத்த முயல்வது தெரிந்ததே. தைவானை ஒரு நாடாக ஏற்றுக் கொள்ள மறுக்கும் சீனா, அது தன்னுடைய நாட்டின் ஒரு பகுதி என்று உரிமை கோரி வலியுறுத்தி வருகின்றது.

தைவானை 'சீனக் குடியரசு' என்றும், சீனாவை 'மக்கள் சீனக் குடியரசு' என்றும் அழைப்பர்.

'மக்கள் சீன குடியரசு'க்கு நன்றி தெரிவிக்க வேண்டிய பிரதமர் 'சீனக் குடியரசு' என்று குறிப்பிட்டு தைவானுக்குநன்றியைத்தெரிவித்திருக்கிறார்.

சீனாவுடன் நெருங்கி பழகும் இலங்கை, தைவானுடன் ராஜதந்திர உறவுகளைப் பேணுவதில்லை.

ஆனால் இப்படி சீனத் தூதுவரை கொழும்பு துறைமுகத்தில் நீண்ட நேரம் காக்க வைத்திருந்தார், சீனாவுக்கு நன்றி தெரிவிப்பதற்கு பதிலாக தைவானுக்கு நன்றி தெரிவித்தார் என்றெல்லாம் கொழும்பு ஊடகம் ஒன்று பிரதமரை ஒரு வாங்கு வாங்கி இருந்தது. அதனால் சீற்றமடைந்த பிரதமர் இப்படி ஊடகத் தரப்பு மீது நாடாளுமன்றத்தில் பாய்ந்திருக்கிறார்.

அரசியல்வாதிகள் தவறிழைத்து விட்டு ஊடகங்கள் மீது அபவாதக் குற்றச்சாட்டுகளை சுமத்துவது தவிர்க்க முடியாத அரசியல் கலாசாரமாக இலங்கையில் தொடர்கின்றது.





# இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து உதவும் சந்நிதியான் ஆச்சிரமம்

## கரடிப்பிலவில் 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவி

யாழ்ப்பாணம், தொண்டைமானாறு, சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவு, நெடுங்கேணி, கரடிப்பிலவு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 56 குடும்பங்களுக்கு, 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கரடிப்பிலவு முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலையில் வைத்து நேற்று (18) இந்த உதவி வழங்கப்பட்டது.

அறநெறிப் பாடசாலையின் இணைப்பளர் த.ஜீவா தலைமையில் இடம்பெற்ற இந்த உதவித் திட்ட நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.










# அம்பாறையில் நடைபெற்ற 34ஆவது மத்தியஸ்த தினம்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் 34 ஆவது தேசிய மத்தியஸ்த தின நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

முதலில் பங்கேற்பாளர்களின் பதிவுகள் நடைபெற்றன. பின்னர் மங்கள விளக்கேற்றல், சர்வமத மௌ பிரார்த்தனை, வரவேற்பு நடனம், வரவேற்பு உரை உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக மத்தியஸ்த சபையில் கடமையாற்றியவர்கள் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மத்தியஸ்த சபைகளின் செயற்பாட்டை மேலும் வலுவடையச் செய்யும் நோக்கில் நீதி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவால் ஒவ்வொரு மாட்டங்களிலும் இந்த நிகழ்வு இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தவிர அம்பாறை மாவட்டத்துக்கான நிகழ்வில் மத்தியஸ்த சபையின் செயற்பாடுகள் அதன் மூலம் மேற்கொள்ளப்பட் வெற்றிச் செயற்பாடுகள் தொடர்பிலும் அது எதிர்நேக்கும் சவால்கள் தொடர்பிலும் கருத்துரைகளும் அனுபவப் பகிர்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சின் மாவட்ட பயிற்சி உத்தியோகத்தர்களான சமன் நாரங்கமன மற்றும் எம்.ஐ.எம். ஆஸாத், விசேட காணி மத்தியஸ்த சபையினர் மற்றும் ஏனைய மத்திய சபைகளின தவிசாளர்கள், மத்தியஸ்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# கல்முனையில் நடந்த கிரிக்கெட்; ஸாஹிரா கல்லூரி அணி வெற்றி!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை 13 வயதுக்கு உட்பட்ட கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி கல்முனை ஸாஹிரா கல்லூரி அணிக்கும் அம்பாறை சத்தாதிஸ்ஸ அணிக்கும் இடையில் உஹன விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. போட்டியில் கல்முனை ஸாஹிரா கல்லூரி அணி வெற்றியீட்டியது.

முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சத்தாதிஸ்ஸ அணி 42 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 67 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதனை எதிர்கொண்ட ஸாஹிரா கல்லூரி அணியினர் 20 ஆவது ஓவரில் 8 விக்கெட்டுகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

தொடர்ந்தும் சத்தாதிஸ்ஸ அணி இரண்டாவது இன்னிங்சில் 56 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை விட்டுக் கொடுத்து போட்டியை முடிவு செய்தது.

தொடர்ந்து ஸாஹிரா கல்லூரி அணி துடுப்பெடுத்தாடிய போது ஒரு விக்கெட் இழப்புக்கு 10 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை போட்டி நிறைவடைந்தது.

இதில் கல்முனை ஸாஹிரா அணியில் விளையாடிய இல்ஹாம் உமர் இரண்டு இன்னிங்சிலும் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். அஹ்திர் 23 ஓட்டங்கள், அதீப் 2 ஆறு ஓட்டங்கள் அடங்களாக 19 ஓட்டங்களும் பெற்றிருந்தனர்.

இந்த வெற்றிக்காக உறுதுணையாய் இருந்த பாடசாலையின் இணைப்பாடவிதானத்துக்குப் பொறுப்பான பிரதி அதிபர் எம்.எம்.தன்ஸீல், மற்றும் மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கிய பொறுப்பாசிரியர் எம்.எம். றஜீப், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான ஏ.எம். ஜப்ரான், எம்.யூ.எஸ். ஷம்லி, ஆலோசனை வழங்கிய ஆசிரியர் எம்.ஐ.அமீர் மற்றும் திறமையாக விளையாடிய மாணவர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதாக பாடசாலை முதல்வர் எம்.ஐ. ஜாபீர் தெரிவித்தார்.



# தேசிய முன்னணியின் கொள்கை விளக்க மாநாடு கிண்ணியாவில் இடம்பெற்றது

(எச். எம். ஹலால்தீன் )

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் விளக்கக் கூட்டமும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் கொள்கை விளக்க மாநாடும் கிண்ணியா நகர சபை பல்நோக்கு மண்டபத்தில் நடை ;பெற்றது.

என். எப் .ஜி. ஜி. கட்சியின் தவிசாளர் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் உள்ளூராட்சி உறுப்பினர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் செயற்குழு உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.



# கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு கிண்ணியா வலயத்தின் பற்றாக்குறை!

## நிவர்த்தி செய்யக் கோருகிறார் இம்ரான் எம்.பி.

(ஹஸ்பர் ஏ.எச்)

கிண்ணியா கல்வி வலயத்தில் நிலவும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் இரத்தினசேகரவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஆளுநருக்குச் சமர்ப்பித்துள்ள கடிதத்தில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கிண்ணியா கல்வி வலயம் 68 பாடசாலைகளையும், சுமார் 24 ஆயிரம் மாணவர்களையும் கொண்டது. இங்கு அனுமதிக்கப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவை ஆளணி 20 ஆகும். ஆனால் தற்போது 3 இலங்கை கல்வி



நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் மட்டுமே இங்கு கடமை புரிகின்றனர்.

இதனால் கிண்ணியாவின் கல்வி நிர்வாகம் மிகவும் பின்னடைந்து காணப்படுகின்றது. இது மாணவர்களின் கற்றலில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு பற்றாக்குறை இருந்தாலும் சில வலயங்களில் 10 பேர் வரை பணி புரிகின்றனர். மாகாணத்தில் இருக்கும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சரியாகப் பகிரப்படாமையே இதற்குக் காரணமாகும். இதனால் கிண்ணியா வலயம், மாகாணக் கல்விப் பகுதியினரால் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகிறது என்று குற்றச்சாட்டுக்களும் உள்ளன.

எனவே, தயவு செய்து இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு கிழக்கு மாகாணத்தில் கடமையில் இருக்கும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளை சரியாகப் பங்கீடு செய்து கிண்ணியா வலய பற்றாக்குறையை ஓரளவு என்றாலும் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.- என்றுள்ளது.



# சுவாமி விபுலானந்த அடிகளார் வீட்டுக்கு வருகை தந்தனர் இந்திய சந்நியாசிகள்!

( வி.ரி. சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் பிறந்த காரைதீவு இல்லத்துக்கு இந்தியாவில் இருந்து வருகை தந்த சன்னியாசிகள் வருகை தந்துள்ளனர்.

பகவத்கீதை, புகழ் கீதா, அமிர்தானந்த ஜி மற்றும் ஐந்து மாதாஜிக்களும் கடந்த வெள்ளிக்கிழமை காரைதீவுக்கு வருகை தந்திருந்தனர்.

இந்தியா திருநெல்வேலி மதுரை சாரதா ஆச்சிரம சன்னியாசிகளான சண்முகப் பிரியாம்பா, சுதாதர பிரியாம்பா, நீலகண்ட பிரியாம்பா, சதாசிவ ப்ரியாம்பா, துர்கா பிரியாம்பா ஆகிய ஐந்து மாதாஜிகளும் அவருடன் வந்திருந்தார்கள். இவர்களுடன் இந்தியா தமிழ்நாட்டைச் சேர்ந்த 20 கீதா அன்பர்களும் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த மணிமண்டப வளாகத்துக்கு விஜயம் செய்த அவர்கள் விசேட பூஜையில் கலந்து கொண்டனர்.

பின்னர் மணிமண்டபத்தில் ஒன்று கூடல் பணி மன்ற ஆலோசகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கீதா அமிர்தானந்த ஜி மற்றும் நீலகண்ட பிரியாம்பா ஆகியோர்சிறப்புசொற்பொழிவாற்றினர். அவர்களுக்கு சுவாமி விபுலானந்தரின் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது .

பணி மன்ற செயலாளர் கு. ஜெயராஜி இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலப்பணிப்பாளர் க. இராசரெத்தினம், இந்து ஸ்வயம் சேவக சங்க பிரதிநிதி வரதன் ஜி, மணிமண்டப நிர்வாகி த.நடேசலிங்கம் ஆகியோர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.










# காரைதீவில் எலிக்காய்ச்சல் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வுக் களப்பணி

(வி.ரி. சகாதேவராஜா, நூருல் ஹுதா உமர்)

எலிக்காய்ச்சல் சம்பந்தமாக விவசாயிகளுக்கும், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் களப்பணி நிகழ்ச்சி காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வசீர் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.

அதன் ஒரு அங்கமாக எலிக்காய்ச்சலுக்கு மனிதர்கள் ஏன் பயப்பட வேண்டும் என்பது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

வட மாகாணத்தின் பல பகுதிகளிலும் அதிகரித்த எண்ணிக்கையில் சடுதியாக எலிக் காய்ச்சல் ஒன்று பரவி வருவதாக செய்திகள் அண்மைய நாள்களில் வெளிவந்திருந்தன. இந்த நிலையில் காரைதீவில் இது தொடர்பாக விழிப்புணர்வு நடத்தப்பட்டு வருகிறது.

சிறு விலங்குகள் அதிலும் குறிப்பாக எலியின் சிறுநீர் நீரின் மூலம் மனிதர்களுக்கு பரவும் நோயாகும்.

விரைவான, திட்டமிடப்படாத நகரமயமாக்கல் மற்றும் மோசமான சுகாதாரம், அலட்சியம் ஆகியவற்றின் காரணமாக, வளரும் நாடுகளில் கடுமையான காய்ச்சல் ஏற்படுத்தும் நோய்க்கான முக்கிய காரணமாக லெப்டோஸ்பைரோசிஸ் என்னும் வைரஸ் அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

வீட்டு மற்றும் காட்டு விலங்குகள் லெப்டோஸ்பைர்களை எடுத்துச் செல்வதால், அவ்வாறான இடங்களில் வசிக்கும் ஒவ்வொரு நபருக்கும் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. சுகாதார ஊழியர்கள், கால்நடை பராமரிப்பாளர்கள், விவசாயிகள் மற்றும் பண்ணை தொழிலாளர்கள், மீனவர்கள், கொறித்துண்ணிகளினால் கடிபடுபவர்கள், நீரில் விளையாடுபவர்கள், வெள்ளம் பாதித்த பகுதிகளில் தன்னார்வ மீட்புப் பணிகளில் ஈடுபடுபவர்கள், துப்புரவுப் பணியாளர்கள், கழிவுநீர் தொழிலாளர்கள், இந்த நோயால் அதிகம் பாதிக்கப்பட கூடியவர்களாக உள்ளனர்.

வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களின் பின்னர், குளம் குட்டைகளில் குளிப்பதை தவிர்த்தல், வெள்ளம் பார்க்க செல்வதை தவிர்த்தல், கொதித்து ஆறிய சுத்தமான நீரை பருகுதல், விவசாய வேலைகளுக்கு சப்பாத்து அணிதல், காலில் உள்ள காயங்களை மூடி பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மூலம் இந்த நோய் தொற்றுவதில் இருந்து பாதுகாப்புப் பெற முடியும்.

அதிக காய்ச்சல், தலைவலி, உடல் வலி, கண் மஞ்சளாதல் போன்ற அறிகுறிகள் இருந்தால் தாமதிக்காமல் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சென்று வைத்திய ஆலோசனை பெற்றுக் கொள்வது மிகவும் சிறந்தது. அது போல உங்கள் பிரதேசங்களில் எலி காய்ச்சல் பரவினால் இந்த நோய் உங்களுக்கு ஏற்பாடாமல் இருக்கத் தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

எலிக்காய்ச்சல் குறித்து தெரிந்து கொள்ள, இலவசமாக தடுப்பு மருந்துகளை பெற்று கொள்ள உங்கள் பிரதேசத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளை அல்லது வைத்தியசாலைகளை நாட முடியும் என்று காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அறிவித்தல் வெளியிட்டுள்ளது.

# கலாபூஷண விருது வழங்கிக் கௌரவிப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியாவைச் சேர்ந்த சந்திரசிறி மஹாகம பல துறைகளில் சிறந்து விளங்கியமைக்காக அரச கலாபூஷண விருது வழங்கும் விழாவில் கலாபூஷண் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஓவியர், அரசியல் கார்ட்டூனிஸ்ட், நாவலாசிரியர், ஓவிய வடிவமைப்பாளர், பத்திரிகையாளர் என கலைத்துறையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பைப் பாராட்டி நுவரெலியாவைச் சேர்ந்த சந்திரசிறி மஹாகமவுக்கு இந்த ஆண்டுக்கான அரச கலாபூஷண் விருது வழங்கப்பட்டுள்ளது.

புத்த சாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் இணைந்து 39 ஆவது தடவையாக கலாபூஷண் அரச விருது வழங்கும் விழாவை புத்த சாசன அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி தலைமையில் அராலிய கஹா மன்றில் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.







# மாவட்ட இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பாராட்டு!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடம் தோறும் நடாத்தப்பட்டு வரும் தேசிய இலக்கிய விருது வழங்கல் விழாவை முன்னிட்டு பிரதேச மட்ட, மாவட்ட மட்டப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாவட்ட மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றின்ஸான் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவஞானம் ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கினார்.



பிரதேச மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டி மற்றும் திறந்த பிரிவு போட்டிகளில் முதலிடத்தை பெற்ற போட்டியாளர்கள் மாவட்ட மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றவர்கள் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டனர். இதில் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்ற போட்டியாளர்கள் இங்கு சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர் .

இதில் காரைதீவு பிரதேச செயலாளரும் பொறியியலாளருமான ஜி.அருணன், உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன், கலாசார உத்தியோகத்தர் சுரேஷ்குமார் உட்பட பிரதேச செயல்களில் கடமையாற்றும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# சிறுவர் பேரவையின் உறுப்பினர்களுக்கு வதிவிட திறன் பயிற்சிச் செயலமர்வு

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் பேரவையின் உறுப்பினர்க ளுக்கான வதிவிட திறன் பயிற்சி செயலமர்வு இடம்பெற்றுள்ளது.

சிறுவர்கள் அவர்களது உரிமைகளை அறிந்து கொண்டு அவர்களே அவர்களை உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் வலுப்படுத்தும் நோக்கில் தன்னாமுனை மியாமி மண்டபத்தில் இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது.

நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட உதவி அரச அதிபர் ஜீ.பிரணவன் தலைமையில் மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் தி.மதிராஜின் ஏற்பாட்டில் இடம்பெற்ற செயலமர்வில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிறுவர் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

செரி நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்று வரும் இந்தச் செயலமர்வில் செரி நிறுவனத்தின் இலங்கைக்கான தேசிய பணிப்பாளர் வீ.ஈ.தர்சன், செரி நிறுவனத்தின் மாகாணப் பணிப்பாளர் எஸ்.பகீரதன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# பயணிகள் கப்பல் மீது மோதிய இந்திய கடற்படையின் கப்பல்

## 13 பேர் உயிரிழப்பு



மும்பை கடற்பகுதியில் இந்திய கடற்படை படகு ஒன்று பயணிகள் கப்பல் மீது மோதியதில் ஏற்பட்ட விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் இந்திய கடற்படையைச் சேர்ந்த 3 பேரும் அடங்குகின்றனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி கடற்படை கப்பல் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் பயணிகள் கப்பலின் மீது மோதியதால், விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்குள்ளான பயணிகள் கப்பலில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட வர்களை மீட்கும் பணியில் அந்நாட்டு கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடற்படைக் கப்பலின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள் ளதுடன், இது தொடர்பில் விசேட விசார ணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

# இந்தியாவுடன் இணைந்து பணியாற்றுவதற்கு தயார்

## சீனா அறிவிப்பு



இந்தியாவுடன் இணைந்து பணி யாற்ற தாம் தயாராக இருப்பதாகவும், இரு நாடுகளின் ஒற்றுமையை அதிக ரிக்க தாம் தீர்மானித்துள்ளதாகவும் சீன அரசு அறிவித்துள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு கால் வான் பள்ளத்தாக்கில் ஏற்பட்ட மோதல் சம்பவம் இரு நாடுகளுக்கு இடையே யான உறவுகளை கடுமையாகப் பாதித் திருந்தது. இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையேயும் முக்கிய பேச்சுவார்த்தைகள் எதுவும் பெரிய அளவில் இடம்பெறவில்லை.

அத்துடன், எல்லை பகுதிகளில் பதற்றமான சூழல் காணப்பட்டது. இந் திய அரசாங்கம் சீனாவின் புகழ் பெற்ற செயலிகள் மற்றும் சில தயாரிப்புக்க ளைப் புறக்கணித்தது. இதனால் இரு நாடுகளுக்கு இடையேயும் பனிப்போ ரொன்று நிலவி வந்தது.

எனினும் கால்வான் சம்பவம் நடந்து 4 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அது போன்ற சம்பவமொன்று மீண்டும் பதிவாகவில்லை. பெரியதாக எந்த பிரச்னையும் வெடிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே இரு நாடுகளுக் கும் இடையிலான இராணுவ பிரச்சி னைக்குத் தீர்வுகாண தாம் முன்வந்துள் ளதாகவும், இது போன்ற விடயங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்ப தற்கான நடவடிக்கைகளை தாம் முன்னெடுத்துள்ளதாகவும் சீன அரசு தெரிவித்துள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் சீனாவின் மன மாற்றத்திற்கு வேறு காரணம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தியாவும், சீனாவும் ஏறத்தாழ ஒரே காலத்தில்தான் விடுதலை அடைந் தன. எனினும் உலகப் பொருளாதாரத் தில் சீனா முதலாவது இடத்திலும், இந்தியா 5 ஆவது இடத்திலும் உள்ளன.

குறிப்பாக இலத்திரனியல் உபகர ணங்களின் உற்பத்தியில் சீனா அசுர வேகத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த வளர்ச்சியானது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிடையே அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதன்காரணமாக அந்நாடுகள் சீனா வின் தயாரிப்புகளை பாரிய அளவில் புறக்கணித்து வருகின்றன.

இதனையடுத்து உலக சந்தையில் சீன பொருள்களுக்கான கேள்வி கொஞ்சம் கொஞ்சமாக குறைவடைந்து கொண்டு வருகின்றது. எனவே தமது பொருளாதார சந்தையை மேலும் வலுப்படுத்தும் கட்டாயத்துக்கு சீன அரசு தள்ளப்பட்டுள்ளது.

ரஷ்யாவும், ஆபிரிக்காவும் சீன பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகித்தாலும் அது சீனப் பொருளாதாரம் வலுவடைய போதாது என்பதே உண் மையாகும். இந்நிலையிலேயே சீனா வின் பார்வை இந்தியாவின் மீது திரும் பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அந்தவயையில் இதன் முதற்கட்டமாக இன்று இந்திய பாதுகாப்புத்துறை ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் சீன பாதுகாப்புத்துறை அமைச்சர் வாங் யீ ஆகியோர் பெய்ஜிங்கில் சந்தித்து உரையாடவுள்ளனர்.

இது குறித்து சீனாவின் வெளியுறவுத் துறை செய்தித்தொடர்பாளர் லின் ஜியான் கருத்துத் தெரிவிக்கையில், இந்தியாவுடனான புரிதலை அதிகரிக்க வும், அதன் நலன்களை மதிக்கவும் இணைந்து பணியாற்ற தாம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தொடர் உரையாடல்கள் தான் இரு நாட்டின் நம்பிக்கையை வலுப்படுத்தும் எனவும், வேறுபாடுகளை கலைந்து இரு நாட்டின் உறவுகளை சிறப்பாக்க தாம் தயாராக உள்ளதாகவும் லின் ஜியான் தெரிவித்துள்ளார்.

சீனாவின் இந்த அறிவிப்பு இந்தியா வுக்கு சாதகமான நிலையை ஏற்படுத் துமா அல்லது பாதகமான நிலையை ஏற்படுத்துமா என்பதில் பாரிய ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது.

காரணம் அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளுடன் இந்தியா நல்லுற வினைப் பேணி வருகின்றது. எனினும் சீனா தற்போது இந்தியா இணைந்து கொண்டால் சீனாவினை எதிர்க்கும் உலக நாடுகள் இந்தியாவையும் எதிர்க்குமோ என்ற அச்சம் எழுந்துள் ளமை குறிப்பிடத்தக்கது.




# ‘சிடோ’ புயல் தாக்கம் காரணமாக நூற்றுக்கணக்கானோர் உயிரிழப்பு!



ஆபிரிக்காவில் ஏற்பட்ட ‘சிடோ’ புயலின் தாக்கத்தினால் இதுவரையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரி ழந்தனர்.

இந்தியப் பெருங்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெற்றதுடன் இந்த புயலுக்கு ‘சிடோ’ என பெயரிடப்பட்டது.

கடந்த சில நாள்களாகக் கிழக்கு ஆபிரிக்கா அருகே நிலை கொண்டுள்ள இந்த புயலின் தாக்கத்தால், மலாவியில் கனமழை பெய்து வருகின்றது.

இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக நூ ற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர் என அந்நாட்டு ஊடகங் கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் மொசாம்பிக்கையும் ‘சிடோ’ புயல் தாக்கியதுடன், நியாஸ்சா, கபோ மற்றும் டெல்கடோ உள்ளிட்ட கடலோர மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டன.

புயல் காரணமாக மொசாம்பிக் நாட் டில் மட்டும் 34 பேர் உயிரிழந்தனர். 300 இற்கும் மேற்பட்டோர் படுகாய மடைந்துள் ளனர் என தெரிவிக்கப் படுகின்றது.




# பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்க அமேசான் ஊழியர்கள் தீர்மானம்




அமெரிக்காவில் உள்ள ஆயிரக்கணக்கான அமேசான் ஊழியர்கள் பணிச் சுமை கொண்ட கிறிஸ்துமஸ் காலத்தில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.

சிறந்த ஊதியம் மற்றும் நிபந்தனைகள் சம்பந்தமாக தொழிற்சங்க அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்த மறுப்பதாக குற்றம் சாட்டி இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அமெரிக்க வரலாற்றில் நிறுவனத்திற்கு எதிரான மிகப்பெரிய வேலைநிறுத்தத்தில் இன்று வியாழன் அன்று கிழக்கு நேரப்படி காலை 6 மணி முதல் நியூயோர்க், அட்லாண்டா மற்றும் சான் பிரான்சிஸ்கோ உள்ளிட்ட நகரங்க ளில் அமைந்துள்ள அமேசன் நிலைய தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்று வுநயஅளவநசள தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

வட அமெரிக்காவின் மிகப்பெரிய தொழிற்சங்கங்களில் ஒன்றான வுநயஅளவநசள, சில்லறை வர்த்தக நிறுவனமான அமேசானின் 800,000 பலமான அமெரிக்க பணியா ளர்களில் சுமார் 10,000 தொழிலாளர்களை பிரதிநிதித் துவப்படுத்துகிறது.

எனினும், அமேசான் தனது ஊழியர்களை பிரதிநிதித் துவப்படுத்தும் தொழிற்சங்கத்தின் கூற்றை மறுக்கிறது மற்றும் அதன் நடத்தை சட்டவிரோதமானது என்று கூறுகிறது.

*Walmart* வால்மார்ட்டுக்குப் பின்னர், உலகின் இரண்டாவது பெரிய தனியார் நிறுவனமான அமேசான், பல ஆண்டுகளாக அதன் நிலையங்களில் பாதுகாப்பான நிலைமைகளுக்கு மேல் இலாபத்தை ஈட்டுவதாக குற்றச்சாட்டுகளை எதிர் கொண்டுள்ளது.

கனடா முரசு
பக்கங்கள் 02
வியாழக்கிழமை 19/12/2024

## கனடாவின் பணவீக்கம் நவம்பரில் வீழ்ச்சி

கனடாவின் பணவீக்க விகிதம் கடந்த நவம்பர் மாதத்தில் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த நவம்பர் மாதத்தில் கனேடிய 02

# புதிய நிதியமைச்சரை நியமித்தார் ட்ரூடோ!



**கனடாவின் நிதியமைச்சராக இருந்த கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் திடீரென தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்திருந்த நிலையில், புதிய நிதியமைச்சராக டொமினிக் லிபிளான்கை அந்நாட்டின் ஜனாதிபதி ஜஸ்டின் ட்ரூடோ நியமித் துள்ளார்.**

**கனடாவைச் சேர்ந்த ஒவ்வொரு வரும் 250 கனடா டொலர்கள் காசோலை வழங்குவதற்கான கொள்கை தொடர்பாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கும் நிதிய மைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் வுக்கும் இடையே கடந்த காலங்களில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.**

இதைத் தொடர்ந்து, கடந்த வாரம் கருத்து தெரிவித்த ஜஸ்டின் ட்ரூடோ 'தனது அரசில் உயர்நிலை பொருளாதார ஆலோசகராக கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் இருப்பதில் தனக்கு விருப்பம் இல்லை' எனத் தெரிவித்திருந்தார்.

இதனால், கனடாவின் நிதியமைச்சரும், துணைப் பிரதமருமான கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் வருடாந்திர அரசு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக, தனது பதவியை இராஜினாமா செய்தார்.

கிறிஸ்டியா ஃபிரீலேண்ட் பதவியை இராஜினாமா செய்தமை, ட்ரூடோ அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது.

இதையடுத்து, தனது நெருங்கிய வட்டாரத்தில் உள்ள டொமினிக் லிபிளான்கை புதிய நிதியமைச்சராக நியமித்து, பிரதமர் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஐந்து அமைச்சரவை அமைச்சர்கள் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.


# கனடா தற்பொழுது அமெரிக்காவின் 51 ஆவது மாநிலமாக மாறிவருகிறது

## *ட்ரம்ப் தெரிவித்த கருத்தால் சர்ச்சை*

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், கனடா தொடர்பாக தெரிவித்த கருத்தானது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் " கனடா தற்பொழுது அமெரிக்காவின் 51 ஆவது மாநிலமாக மாறிக்கொண்டு வருகின்றது எனவும் 51 ஆவது மாநிலமாக கனடாவை மாற்றுவது சிறந்த யோசனை என்றும் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

அத்துடன், கனடாவிற்கு எதற்கு மானியங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும், அனேகமான கனடா மக்கள் அமெரிக்காவின் 51 ஆவது மாநிலமாக கனடா மாறுவதையே விரும்புவதாகவும், அவ்வாறு மாறினால் கனடா மக்கள் பெருமளவு வரியைச் சேமிக்க முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.




இந்நிலையில் ட்ரம்ப் தெரிவித்த கருத்தானது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# எல்லை பாதுகாப்பிற்காக விதிகளை கடுமையாக்குகின்றது கனடா அரசு!






எல்லைப் பாதுகாப்பிற்காக கனடா அரசாங்கம் கடந்த திங்களன்று 1.3 பில்லியன் கனேடிய டொலர்களை முன்மொழிந்தது.

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந் தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவிற்குள் குடியேறுபவர்கள், போதைப் பொருள்களின் நடமாட் டத்தை கனடா குறைக்காத பட்சத்தில், வரி விதிக்கப்படும் என அச்சுறுத் தியதை அடுத்து இந்த அறிவிப்பு வந்துள்ளது.

முன்னதாக ட்ரம்ப், கனடா மற்றும் மெக்சிகோவில் இருந்து அமெரிக் காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து பொருள்களுக்கும் 25 வரி விதிக்கப்படும் என அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இத்தகைய கட்டணங்கள் கனடா வின் பொருளாதாரத்திற்கு அடியாக அமையும் என பொருளாதார நிபுணர் கள் கூறுகின்றனர்.

இந் நிலையில் கடந்த செவ் வாயன்று, இந்தத் திட்டத்தின் விவரங் களை அறிவித்த கனடாவின் நிதி மற்றும் அரசுகளுக்கிடையேயான விவகாரங்களுக்கான அமைச்சர் டொமினிக் லெப்லாங்க், மத்திய அர சாங்கம் எல்லைப் பாதுகாப்பு அதி கரிப்புக்கு 1.3 பில்லியன் நிதியை ஒதுக்கும் என்றார்.

இந்த நடவடிக்கைகள், "சட்ட விரோத போதைப்பொருள் மற்றும் ஒழுங்கற்ற குடியேற்றத்திற்கு எதிராக நமது எல்லையைப் பாதுகாக்கும்." என்றார்.

கனேடிய மத்திய அரசு எல்லைப் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு 5 தூண்கள் கொண்ட அணுகுமுறையை வகுத்துள்ளது.

அவற்றில் ஃபெண்டானில் வர்த்த கத்தின் இடையூறு, சட்ட அமலாக்கத் திற்கான புதிய கருவிகள், அமெரிக்க சட்ட அமலாக்கத்துடன் மேம்பட்ட ஒருங்கிணைப்பு, அதிகரித்த தகவல் பகிர்வு மற்றும் எல்லையில் போக்கு வரத்தை கட்டுப்படுத்துதல் ஆகிய வற்றை உள்ளடக்கியது.

# அமெரிக்காவின் மாநிலமாக கனடா ஒருபோதும் மாறாது!

## ஒன்றாயோ மாகாண முதல்வர் டக் போர்ட் தெரிவிப்பு

அமெரிக்காவின் மாநிலமாக கனடா ஒருபோதும் மாறப்போவ தில்லை என ஒன்றாயோ மாகாண முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள் ளார்.

அமெரிக்காவின் 51 ஆவது மாநில மாக கனடா மாற வேண்டும் என்று அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

சமூக ஊடகம் வாயிலாக அவர் இந்த கருத்தினை வெளியிட்டு இருந் தார். எவ்வாறு எனினும் இந்த கருத்து தொடர்பில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில், பெருமைமிகு கனடியர்கள் எப்பொழுதும் கனடியவர் களாகவே இருக்க விரும்புகின்றனர்



என ஒன்றாயோ மாகாண முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தனது கெடுபிடிகளை அதிகரித்தால் ஒன்றாரியோவில் இருந்து கனடிய மாநிலங்களுக்கு விநியோகம் செய்யும் மின்சாரம் துண்டிக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நியூயோர்க், மிச்சிகன் மற்றும் மினசோட்டா போன்ற மாநிலங்க ளுக்கு ஒன்றாரியோவில் இருந்து மின்சாரம் விநியோகம் செய்யப்படு கின்றது.

இவ்வாறான ஒரு பின்னணியில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இறுதி கட்டமாக இவ்வாறு மின் சாரத்தை துண்டிக்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என டக் போர்ட் தெரி வித்துள்ளார்

இதேவேளை, கனடியர்களுக்கு தங்களை பார்த்துக் கொள்ள தெரியும் எனவும் எந்த ஒரு நாட்டினதும் மாநிலமாக மாறவேண்டிய அவசியம் கிடையாது எனவும் பிரபல நடிகர் மைக் மெயர்ஸ் தெரிவித்துள்ளார்.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணவீக்க விகிதம் 1.9 வீதமாக பதிவாகியுள்ளது.

அந்நாட்டு அரச நிறுவனமான Statistics Canada வெளியிட் டுள்ள தரவுகளின் அடிப்படையில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, குறைந்த அடமான வட்டி செலவுகள் மற்றும் மலிவான சுற்றுலா பயண கட்டணங்களின் சலு கைகள் என்பன பணவீக்க வீழ்ச்சிக்கு காரணம் என்றும் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், பொருள்களின் விலை உயர்வு பெரும்பாலும்



மந்தமடைந்துள்ளதாகவும் உணவுப் பொருள்களின் விலை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 2.6 வீதம் அதிகரித்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.